அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 16/2022(I)

எனது இலக்கம் : EST-6/03/LEA/1060
பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2022.06.26

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

## அரச அலுவலகங்களுக்கு உத்தியோகத்தர்களை வரவழைப்பதை மட்டுப்படுத்துதல்

மேற்படி விடயம் தொடர்பாக 2022.06.17 ஆந் திகதி வெளியிடப்பட்டுள்ள 16/2022 என்னும் இலக்கமுடைய அரசாங்க நிர்வாகச் சுற்றுநிருபத்திற்குத் தங்களது அவதானத்தைச் சமர்பிக்கின்றேன்.

02. நாளுக்கு நாள் போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் போது பொது மக்கள் முகம் கொடுத்துள்ள பிரச்சனையான நிலையைக் கருத்திற் கொண்டு, அத்தியாவசிய சேவைகளுக்கு அதிக இடமளித்துள்ளதால், மீண்டும் அறியத் தரும் வரையில் மேற்படி சுற்றுநிருபத்திற்கமைய அமைச்சின் செயலாளர்கள்/ மாகாணப் பிரதான செயலாளர்கள்/ திணைக்களத் தலைவர்கள்/ நிறுவனத் தலைவர்களினால் உத்தியோகத்தர்ளைச் சேவைகள் நிலையத்திற்கு வரவழைப்பது தொடர்பாகத் தீர்மானிக்கும் போது, நிறுவனத்தின் நாளாந்தக் கடமை நடவடிக்கைகளை இடையூறுகள் இன்றி நடாத்திச் செல்வதற்கு அத்தியாவசியமான ஆகக் குறைந்த அலுவலக உத்தியோகத்தர்களை மட்டும் சேவை நிலையத்திற்கு வரவழைப்பதற்கும், இயன்ற சகல சந்தர்ப்பங்களின் போதும் உத்தியோகத்தர்களுக்கு வீட்டில் தரித்திருப்பதற்கு இடமளித்து, அவர்களது சேவையை இணையவழி முறை ஊடாகப் பெற்றுக்கொள்வதற்கும் முன்னுரிமையை வழங்கி நடவடிக்கை எடுக்கும் படி அறியத் தருகின்றேன்.

03. பொது மக்களுடன் நேரடியாகக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கு உத்தியோகத்தர்களை வரவழைப்பது தொடர்பாக தீர்மானங்களை எடுப்பது, உரிய அமைச்சின் செயலாளரின்/ மாகாணப் பிரதான செயலாளரின் அறிவுரைகள் மற்றும் நெருங்கிய மேற்பார்வையுடன் மேற்கொள்வதற்கு உரிய நிறுவனத்தின் தலைவர்கள்/ பிரதேசத் தலைவர்கள் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

04. இதற்கமைய, இக் காலத்தினுள் ஆகக் குறைந்தளவு எரிபொருளை பாவிக்கக் கூடிய முறையில் உத்தியோகத்தர்களது போக்குவரத்துக்களை மட்டுப்படுத்தல் வேண்டும் என்பதுடன், சகல கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை இணையவழி முறை ஊடாக நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

05. மேலும், அரசின் அத்தியாவசிய சேவைகளை நடாத்திச் செல்வதற்கு இதனால் தடைகளின்றி இருத்தல் வேண்டும்.

ஒப்பம்./ எம்.எம்.பீ.கே. மாயாதுன்னே
செயலாளர்
பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு